# இதயத்தை பாதுகாக்கும் பயிற்சி கருத்தரங்கம்

## சென்னையில் நடக்கிறது

சென்னை, ஏப்.5–

இதய சிகிச்சை சிறப்பு மருத்துவர் டாக்டர் சொக்க லிங்கம் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறி யிருப்பதாவது–

கையளவு உள்ள இதயத்தை பத்திரமாக பார்த்துக் கொள்வதும் நம் கையில்தான் உள்ளது. சென்னையில் உள்ள கார்டியாக வெல் நெஸ் இன்ஸ்டிட்யூட்டில் இம்மாதம் 15–ந்தேதி முதல் 20–ந் தேதி வரை வரை இதயத்தை பாதுகாக்கும் பயிற்சிகளும் ஆலோசனைகளும் அடங்கிய செயல்வடிவ கருத் தரங்கு நடைபெற உள் ளது. நேரம் காலை 10 முதல் மதியம் 1 மணி வரை.

இது நான்கு வகையாக பிரிக்கப்பட்டுள்ளது. இளம் வயதினர் நடுத்தர வயதினர், மத்த வயதினர், இதய நோய் உடையவர்கள் என்று வயதிற்கும் உடல்நலத்திற்கும் ஏற்ப இந்த கருத்தரங்கு வேறுபடும். இதில் பங்கு பெற்று பயனடைய வேண்டு மானால் பதிவு செய்யுங்கள். முன்பதிவு வருகிற 12–ந்தேதி வரை. தொலைபேசி எண். 9940408828, 044–43192828. இவ்வாறு அதில் கூறியுள் ளார்.